
ஒவ்வொரு பிள்ளைக்கும் உரியது

# குற்றவியல் நீதிபரிபாலனச் செயன்முறையுடன் தொடர்புடைய சிறுவர்களின் சட்டப்பாதுகாப்பு




இக்கைந்நூல் குற்றவியல் நீதிபரிபாலனச் செயன்முறையுடன் தொடர்புடைய சிறுவர்கள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடும் நன்னடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தர்கள், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பொலிசு உத்தியோகத்தர்கள், தொழில் உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோருக்காக ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தினதும் (யுனிசெப்), இலங்கையிலுள்ள சேவ் த சில்ரென் (SCiSL) அமைப்பினதும் ஒத்துழைப்புடன் நீதி,மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சினால் தயாரிக்கப்பட்டது.

unicef

ஒவ்வொரு பிள்ளைக்கும் உரியது

# இச்சிறு நூலில் நீங்கள் பார்க்கப் போவது

- சிறுவர் மற்றும் இளம் பராயத்தினர் கட்டளைச் சட்டம் 1939 **(CYPO)** எனப்படும் கட்டளைச் சட்டத்தைப் படிப்பவர் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய வழிகாட்டியொன்றை
- சிறுவர் மற்றும் இளம் பராயத்தினர் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் முற்தீர்ப்புச் சட்டத்தை

## முகவுரை

சிறுவர் மற்றும் இளம் பராயத்தினர் கட்டளைச் சட்டம் **(CYPO)** 1939 ஆம் ஆண்டில் சட்டமாக்கப்பட்டிருந்தபோதிலும், 1950 களின் ஆரம்பத்திலேயே அமுலுக்கு வந்தது. "வேண்டியளவு கிடைக்கப்பெறாத" மற்றும் "தவறாளிகளான" இரு வகைப் பிரிவையும் சேர்ந்த சிறுவர் மற்றும் இளம் பராயத்தினர் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் பற்றி சிறுவர் மற்றும் இளம் பராயத்தினர் கட்டளைச் சட்டம் தெளிவாக எடுத்துரைக்கின்றது. இச்சட்டத்தின் கொள்கையும் நடைமுறையும், கடந்த பல வருட காலமாக அரசு இந்த இரு வகைப் பிரிவுகளையும் சேர்ந்த சிறுவர்களையும் கையாண்டு வந்துள்ள முறையை வரையறுத்துள்ளது. சிறுவர் மற்றும் இளம் பராயத்தினர் கட்டளைச் சட்டம் முக்கியமாக பொலிஸ் உத்தியோகத்தர்களாலும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு உத்தியோகத்தர்களாலும் மற்றும் நீதிவான் நீதிமன்றங்களாலும் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இம் மூன்று சேவை வழங்குநர்களில் சிறுவர் சேமநலனின் நிபுணத்துவம் வாய்ந்த பாதுகாவலராக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு உத்தியோகத்தரையே பொருத்தமாக இனங்காண முடியும். இக்கட்டளைச் சட்டத்தின் 21 ஆவது பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள இச்சேம நலக் கோட்பாட்டின் முக்கியத்துவம் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயத்தின் 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சட்டத்தின் **(ICCPR Act No. 56 of 2007)** 5(2) ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள பிள்ளையினது அதியுயர் நலன் கோட்பாட்டினால் தற்பொழுது விஸ்தரிக்கப்படல் வேண்டும்.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் 1956 இல் ஸ்தாபிக்கப்பட்டதுடன், அதன் நடவடிக்கைகளின் அரை நூற்றாண்டுகால நிறைவை சமீபத்தில் கொண்டாடியது. இக்காலப் பகுதியில் மிக இலகுவில் பாதிக்கப்படக்கூடிய எமது சிறுவர்கள் சம்பந்தமாக தூர நோக்கைக் கொண்டுள்ள அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகள் என்பன ஒப்படைக்கப்பட்டுள்ள அதன் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியிலோ அல்லது தமிழ் மொழியிலோ இச்சட்டத்தின் மொழிபெயர்ப்பை பயன்படுத்தும் அனுகூலத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை.

இச்சிறு வெளியீட்டில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு உத்தியோகத்தர்களும் அரசாங்க உத்தியோகத்தர்களும் முக்கியமான இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் பரிச்சயமாக இருக்கவேண்டிய தேவை ஒரு புதுமையான முறையில் அணுகப்பட்டுள்ளது. இது சட்டத்தின் மிக அத்தியவசியமானதும் அடிப்படையானதுமான கோட்பாடுகளை இனங்கண்டு, அவற்றை வேறாக்கியதுடன், பல உத்தியோகத்தர்களும் சாதாரண மக்களும் இச்சட்டம் பற்றி தெரிந்து கொள்வதற்காக தீர்மானிக்கப்பட்ட வழக்குகளையும் உள்ளடக்கியுள்ளது. சேவைகளை வழங்குபவர்களுக்கு சட்டம் எவற்றை தெரியப்படுத்த முயற்சிக்கின்றதோ அவற்றை நேரடியாகத் தெரியப்படுத்தக் கூடிய விதத்தில் மொழி பயன்படுத்தப்பட்டுள்ளது.

இக்கைந்நூல் உண்மையான சட்டத்துக்கு ஓர் அறிமுகமாகப் பயன்படுத்தப்படல் வேண்டும். உத்தியோகத்தர்கள் பலரும் தற்பொழுது இச்சட்டத்தைப் புரிந்து கொண்டு, பயன்படுத்தி, இதனையும் இதன் நடைமுறைப்படுத்தலையும் மேம்படுத்துவதற்கு ஊக்கமடைவார்களென நம்புகிறேன். இச்சட்டத்துடனான இம்மாதிரியான ஈடுபாடு மாத்திரமே இச்சட்டத்தின் சில அம்சங்களை, ஐ.நா. வின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்துடன் இணங்கக்கூடிய விதத்தில் சிறுவர் மற்றும் இளம் பராயத்தினர் கட்டளைச் சட்டத்துக்கு கொண்டுவருவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள சீர்திருத்தங்களின் வெற்றியை உறுதிப்படுத்த முடியும்.

இச்சிறு நூலை வெளியிடுவதற்கு எம்முடன் சேர்ந்து பணியாற்றிய இலங்கையிலுள்ள யுனிசெவ் மற்றும் சேவ் த சில்றன் அமைப்புகளுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவிக்கிறேன்.

சுஹத கம்லத்
செயலாளர்
நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு
2008 செப்டம்பர் 01

# சிறுவர் மற்றும் இளம் பராயத்தினர் கட்டளைச் சட்டம் - 1939

இளம் பராயத்தினர் நீதிமன்றம்

பொதுவான கோட்பாடுகள்

இளம் பராயத்தினர் நீதிபரிபாலனம்

பராமரிப்பும் பாதுகாப்பும்

# இளம் பராயத்தினர் நீதிமன்றம்

## இளம் பராயத்தினர் நீதிமன்றம் என்றால் என்ன ?

சிறுவர் மற்றும் இளம் பராயத்தினர் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டு ஒன்று பற்றி விசாரிப்பதற்காக அல்லது பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு வழக்கு தொடர்பான விசாரணையை நடாத்துவதற்காக எந்தவொரு நீதிவான் நீதிமன்ற அமர்வும் **இளம் பராயத்தினர் நீதிமன்றம்** எனப்படும். இளம் பராயத்தினர் நீதிமன்ற நடவடிக்கைகள் பொதுமக்கள் முன்னிலையில் இடம் பெறுவதில்லை.

**பிரிவுகள் 2 மற்றும் 7 (3)**

## இளம் பராயத்தினர் நீதிமன்றமொன்றின் பிரதான நடவடிக்கை முறைகள் யாவை ?

இளம் பராயத்தினர் நீதிமன்றமொன்றில் பிள்ளையொன்று அல்லது இளம் பராயத்தினர் ஒருவர் எடுக்கக்கூடிய இரண்டு நடவடிக்கை முறைகள் உள்ளன. அவை :-

### 1. இளம் பராயத்தினர் நீதிபரிபாலன நடவடிக்கை முறை

தண்டனைச் சட்டக்கோவையின் 383 ஆம் பிரிவின் கீழ் கொலைக்குற்றங்கள், குற்றம் சாட்டத்தக்க மரணம் அல்லது கொலை செய்வதற்கு அல்லது குற்றம் சாட்டத்தக்க மரணத்தை விளைவிப்பதற்கு எத்தனித்தல் அல்லது ஆயுதம் தாங்கியபடி கொள்ளையிடல் ஆகியன தவிர்ந்த, பிள்ளை அல்லது இளம் பராயத்தினர் ஒருவரால் இழைக்கப்பட்ட குற்றமொன்றை விசாரித்தல் மற்றும்

### 2. பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை முறை

பராமரிப்பு அல்லது பாதுகாப்பு தேவைப்படும் பிள்ளையொன்றின் அல்லது இளம்பராயத்தினர் ஒருவரின் வழக்கை விசாரித்து, குடும்பத்துக்குள் அல்லது சொந்தக் குடும்பத்துக்கு வெளியே வேறுபராமரிப்பு ஒழுங்குக்கான பொருத்தமான கட்டளையொன்றைப் பிறப்பித்தல்.

## பிள்ளையெனக் கருதப்படுவது யார் ?

14 வயதுக்குக் குறைந்த எந்தவொரு நபரும் பிள்ளையெனக் கருதப்படுவார்.

**பிரிவு 88**

## இளம் பராயத்தவர் எனப்படுவது யார் ?

16 வயதுக்குக் குறைந்த எந்தவொரு நபரும் இளம் பராயத்தவர் ஆவார்.

**பிரிவு 88**

## இரகசியத்தன்மை

சிறுவர் நீதிமன்றத்தில் இடம்பெறும் நடவடிக்கை முறைகள் பற்றிய அறிக்கையெதுவும் பிரசுரிக்கப்பட மாட்டாது. பிள்ளையொன்றை அல்லது இளம் பராயத்தினர் ஒருவரை அடையாளம் கண்டு கொள்ளக் கூடியதற்கு உதவக்கூடிய எந்தவொரு சாதனமும் பிரசுரிக்கப்படமாட்டாது.

**பிரிவுகள் 11 மற்றும் 20**

குற்றவியல் நடவடிக்கை முறைகளைப் பார்ப்பதற்கு எந்தவொரு பிள்ளையையோ அல்லது இளம் பராயத்தவரையோ அனுமதிக்கக் கூடாது. மரியாதையான நடத்தைக்கு அல்லது நல்லொழுக்கத்துக்கு எதிராக இழைக்கப்படும் குற்றம் தொடர்பாக பிள்ளையொன்று அல்லது இளம் பராயத்தினர் ஒருவர் சாட்சியமளிக்கையில் நீதிமன்றத்தில் ஏனையவர்கள் சமூகமளிக்காதிருக்கச் செய்யலாம்.

**பிரிவுகள் 18 மற்றும் 19**

## சிறுவர் மற்றும் இளம் பராயத்தினர் கட்டளைச் சட்ட விண்ணப்பம்

பகுதி II - 13 - 47 வரையான பிரிவுகள் சிறுவர்களும் இளம்பராயத்தினரும் சம்பந்தப்பட்டுள்ள சகல குற்றவியல் நடவடிக்கை முறைகளுக்கு உரியனவாகும் . சிறுவர் மற்றும் இளம் பராயத்தினர் கட்டளைச் சட்டத்துடன் தண்டனைச் சட்டக் கோவையும் (ீயெட ஊழனந), குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவையும் (Criminal Procedure Code) முரண்டபடாதவிடத்து, அதனைப் பூரணப்படுத்துவதற்காக இவற்றைப் பயன்படுத்த முடியும்.

**பிரிவு 47**

# பொதுக் கோட்பாடுகள்

## சேம நலன் கோட்பாடு

நீதிமன்றம் ஒவ்வொரு வழக்கிலும் பிள்ளையினது அல்லது சிறு பராயத்தவரது சேம நலனுக்கு மதிப்பளித்தல் வேண்டும்.
**பிரிவு 21**

## குற்றமிழைத்துள்ள வயது வந்தவர்களிடமிருந்து பிரித்து வேறாக வைக்கப்படல்.

சகல கட்டங்களிலும் குற்றமிழைத்துள்ள வயது வந்தவர்களிடமிருந்து சிறுவர்களைப் பிரித்து வேறாக வைக்கப்படல் வேண்டும். பெண்பிள்ளைகளுடன் தலைமைத் தாதியொருவர் (ஆயவசழஉ) துணையாக கூடவே செல்லவேண்டும்.
**பிரிவு 13**

## பெற்றோர் அல்லது பாதுகாவலர் சிறுவர்களின் விசாரணை நடவடிக்கை முறைகளின் போது நீதிமன்றத்துக்கு அழைக்கப்படல் வேண்டும்.

பிள்ளையை அல்லது இளம் பராயத்தவரைப் பாதிக்கும் சகல நடவடிக்கை முறைகளின் போதும் அப்பிள்ளையினது அல்லது இளம் பராயத்தவரது பெற்றோரை அல்லது பாதுகாவலரை சமூகமளிக்குமாறு நீதிமன்றம் அழைத்தல் வேண்டும்.
**பிரிவு 16 (1)**

## சமூக அறிக்கைக்காக நன்னடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தருக்கு பொலிசாரின் அறிவிப்பு.

எக்காரணத்துக்காகவேனும் பிள்ளையொன்றை நீதிமன்றில் ஒப்படைப்பதற்கு முன்பதாக அலுவலகப் பொறுப்பதிகாரி உடனடியாக இது பற்றி நன்னடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தருக்கு அறிவித்தல் வேண்டும்.

நன்னடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தர் சமூக விசாரணையொன்றை நடாத்தி நீதிமன்றத்துக்கு அறிக்கையையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
**பிரிவுகள் 17 (1) மற்றும் (2)**

## நன்னடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தர்களினதும் தகுதிவாய்ந்த நபர்களினதும் மேற்பார்வை சம்பந்தப்பட்ட கடமைகள்

நீதிமன்றம் பிள்ளையை நன்னடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தர் அல்லது தகுதிவாய்ந்த நபர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் வைக்க வேண்டுமெனக் கட்டளையிட்டால் இவர்கள் :

(அ) பிள்ளையை காலத்துக்காலம் கிரமமான முறையில் சந்திக்க வேண்டும் அல்லது அறிக்கையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(ஆ) நீதிமன்றக் கட்டளையின் படியான நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதைப் பரிசீலித்தல் வேண்டும்.

(இ) பிள்ளையினது நடத்தை பற்றி நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.

(ஈ) பிள்ளைக்கு அறிவுரை கூறி, உதவி செய்வதுடன், தேவையான போது பொருத்தமான தொழிலையும் தேடிக் கொடுத்தல் வேண்டும்.
**பிரிவு 38 (1)**

# இளம் பராயத்தினர் நீதிபரிபாலனம்

- **பொலிஸ் பிணை**

கைது செய்யப்பட்டபின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அழைக்கப்பட்டு அப்பிள்ளையை அல்லது இளம் பராயத்தவரை பொலிஸ் பிணையில் விடுவித்தல் வேண்டும்.
பிரிவு 14 (1)

- **பொலிஸ் அலுவலகப் பொறுப்பதிகாரி தனது தற்துணிபுக்கெட்டியவாறு தீர்மானமெடுத்தல்.**

புரியப்பட்ட குற்றமானது, தண்டனைச் சட்டக் கோவையின் 383ஆம் பிரிவின் கீழ் கொலை, குற்றம் சாட்டத்தக்க மரணம் அல்லது கொலை செய்வதற்கு அல்லது குற்றம் சாட்டத்தக்க மரணத்தை விளைவிப்பதற்கு எத்தனித்தல் அல்லது ஆயுதம் தாங்கியபடி கொள்ளையிடல் ஆகவும், பொலிஸ் பிணை பொருத்தமான மாற்று நடவடிக்கையாக இல்லாத போதும் பொலிஸ் அலுவலகப் பொறுப்பதிகாரி அப்பிள்ளையை அல்லது இளம் பராயத்தவரை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கு முன்பதாக பிரிவு (14) 3 இன் கீழ் ஏற்பாடு செய்யப்படுகின்ற தடுப்புக்காவல் இல்லமொன்றில் அல்லது தொண்டர் தடுப்புக்காவல் இல்லமொன்றில் தடுத்துவைக்க முடியும்.
பிரிவு 14 (3)

- **உரிமைப்படியான பிணை**

புரியப்பட்ட குற்றம் பிணையில் விடக் கூடியதாக இருப்பின்(1) உரிமைப்படி பிள்ளைக்கு அல்லது இளம் பராயத்தவருக்கு பிணை வழங்கப்படல் வேண்டும். ஏனைய குற்றங்களைப் பொறுத்தவரை இவர்களை தடுப்புக்காவல் இல்லமொன்றில் அல்லது தகுதிவாயந்த நபர் ஒருவருடன் வைத்திருக்க முடியும்.
பிரிவு 15 (1)

- **எந்தவொரு பிள்ளையையும் வயதுவந்தவர்கள் வைக்கப்பட்டுள்ள விளக்க மறியற் சாலைக்கு அனுப்பி வைக்க முடியாது.**

இளம் பராயத்தவர் ஒருவரை மாத்திரமே, அதுவும் பிரிவு 15 (2) குறிப்பிடப்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைகளிலேயே - வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் வரை மறியற் சாலைக்கு அனுப்பி வைக்க முடியும். -
பிரிவுகள் 15 (1) மற்றும் (2)

- **குற்றச்சாட்டு பற்றி விளக்கமளித்தல்**

பிள்ளையொன்றை அல்லது இளம் பராயத்தவர் ஒருவரை நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் போது, அந்நீதிமன்றம் குற்றச்சாட்டு பற்றி விளக்கத்தை விளங்கிக் கொள்ளப்படக் கூடிய மொழியிலும் தாமதமின்றியும் அளிக்க வேண்டும்.
பிரிவு 9 (1)

- **வழக்கு பற்றிய கேட்டல்**

நீதிமன்றம் இரு தரப்புக்களையும் கேட்டதன் பின்னரே வழக்கு பற்றிய தீர்ப்பை எடுக்கவேண்டும்.
பிரிவுகள் 9 (5)

[1] இது பற்றி தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் குற்றங்கள் பற்றிய வகைப்படுத்துதலை விபரிக்கும் குற்றவியல் நடவடிக்கை முறைக்கோவையின் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. குற்றமானது வேறு யாதேனும் சட்டத்துக்கு எதிரானதாக இருப்பின் அச்சட்டம் வழமையாக வகைப்படுத்தலை வழங்கும்.

**■ தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்படுவதற்கு முன் கேட்டல்**

குற்றவாளியென முடிவு செய்த பின்பு கட்டளையைப் பிறப்பிப்பதற்கு முன்பதாக நீதிமன்றம் தேவையான விசாரணைகளைச் செய்வதன் மூலம் பிள்ளையினுடைய கடந்த கால பதிவேடு மற்றும் சூழ்நிலை என்பவற்றை கவனத்தில் எடுத்துக் கொள்ள முடியும்.
**பிரிவு 10 (1)**

**■ குற்றவாளியென முடிவு செய்தபின் கட்டளையிடல்**

இளம் பராயத்தினர் நீதிமன்றமானது :-

- முறைப்படி கண்டித்த பின்பு அப்பிள்ளையை அல்லது இளம் பராயத்தவரை விடுவிக்கலாம்.
- **பெற்றோர், பாதுகாவலர் அல்லது மிகக்கிட்டிய வயது வந்த உறவினர்** ஒருவரிடம், அப்பிள்ளையினது அல்லது இளம் பராயத்தவரது நன்னடத்தைக்கு அதிகூடிய காலப்பகுதியான ஒரு வருடத்துக்கு அவ்வயதுவந்தவர் பொறுப்பாக இருப்பாரென வாக்குறுதியளிக்கும் பட்சத்தில் அவரிடம் அப்பிள்ளையை அல்லது இளம் பராயத்தவரை பாரமளிக்குமாறு கட்டளையிடலாம்.
- உறவினரான அல்லது உறவினரல்லாத தகுதி வாய்ந்த நபரொருவர் பராமரிப்பதற்கு விருப்பத்தைத் தெரிவிக்கும் பட்சத்தில் அப்பிள்ளையை அல்லது இளம் பராயத்தவரை அவரின் பராமரிப்பில் விடமுடியும்.
- குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவையின் 306 ஆம் பிரிவின் கீழ் நிபந்தனையுடன் விடுவிப்பதற்கான கட்டளையைப் பிறப்பிக்க முடியும்.
- நன்னடத்தைப் பாதுகாவலர் கட்டளையைப் பிறப்பிக்க முடியும்.
- வயது வந்தவர் ஒருவரைப் பொறுத்தவரையில் சிறைக்கு அனுப்புதல் மூலம் தண்டிக்கத்தக்க குற்றமாக இருக்கும் போது பிள்ளையை அல்லது இளம் பராயத்தவரை அதிகூடிய பட்சம் ஒரு மாத கலப்பகுதிக்கு விளக்கமறியற் சாலையொன்றில் பாதுகாப்பாக பராமரிக்கப்படுமாறு கட்டளையிட முடியும் அல்லது அப்பிள்ளை அல்லது இளம் பராயத்தவர் 12 வயதுக்கு மேற்பட்டவராயின் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட சீர்திருத்தப் பாடசாலையொன்றுக்கு அனுப்பி வைக்கப்படுமாறு கட்டளையிட முடியும்.
  **பிரிவுகள் (25) 1, 26(1), 27 (1) மற்றும் 30**

**■ எந்தவொரு பிள்ளையையும் சிறையிலிட முடியாது**

குற்றமொன்றுக்காக அல்லது தண்டப் பணத்தை செலுத்தாமைக்காக பிள்ளையொன்றை சிறையிலிட முடியாது. இளம் பராயத்தவரையும் கூட, அவர் ஒரு கீழ்ப்படியாத நபரென நீதிமன்றம் அத்தாட்சிப்படுத்தியிருந்தாலேயொழிய, குற்றமொன்றுக்காக அல்லது தண்டப் பணத்தை செலுத்தாமைக்காக அவரை சிறையிலிட முடியாது.
**பிரிவுகள் 23 (1) மற்றும் (2)**

**■ குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்படுதல் தகைமையில்லாமையைக் குறிப்பதல்ல.**

இளம் பராயத்தினர் நீதிமன்றமொன்றில் பிள்ளையொன்று அல்லது இளம்பராயத்தவர் ஒருவருக்கெதிராக குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்படுதல் அல்லது குற்றவாளியென முடிவு செய்தல் தகைமையீனத்தைக் குறிப்பதாகக் கருதப்படமாட்டாது.
**பிரிவு 22**

# பராமரிப்பும் பாதுகாப்பும்

## பராமரிப்பு அல்லது பாதுகாப்பு தேவைப்படும் பிள்ளை அல்லது இளம்பராயத்தவர் யார்?

இவர் பெற்றோர் அல்லது பாதுகாவலர் எவரேனும் இல்லாத நபர் அல்லது

பராமரிப்பையும் பாதுகாப்பையும் வழங்குவதற்கு தகுதியில்லாத அல்லது முறையான பராமரிப்பையும் பாதுகாப்பையும் வழங்காத பெற்றோரை அல்லது பாதுகாவலரை கொண்டிருப்பவராகவும் மற்றும் கெட்டவர்களுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளவராக அல்லது அவரின் நல்லொழுக்கத்துக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலைக்கு முகம் கொடுப்பவராக அல்லது கட்டுப்படுத்த முடியாதவராக இருப்பவர்.

இது உடல் ரீதியான காயத்தை ஏற்படுத்தும் யாதேனுமொரு குற்றம் இழைக்கப்பட்டுள்ள பிள்ளையொன்றையும் அல்லது இளம் பராயத்தவர் ஒருவரையும் அல்லது குற்றமிழைத்தவர் வாழும் அதே குடியிருப்பில் வாழும் பிள்ளையொன்றையும் அல்லது இளம் பராயத்தவர் ஒருவரையும் அல்லது இக்குற்றத்தினால் பாதிப்புக்குள்ளாகி **பராமரிப்பு அல்லது பாதுகாப்பு தேவைப்பட்டால்** மாத்திரம் பாதிக்கப்பட்ட அப்பிள்ளையையும் அல்லது இளம் பராயத்தவரையும் உள்ளடக்குகிறது. பிரிவு 34 (1)

## பாதுகாப்பான இடங்கள் (2)

சிறுவர் மற்றும் இளம் பராயத்தினர் கட்டளைச் சட்டத்தின் கீழ் மூன்று பாதுகாப்பான இடங்கள் உள்ளன. அவையாவன:

- யாதேனுமொரு தடுப்புக்காவல் இல்லம்
- யாதேனுமொரு வைத்தியசாலை
- பிரிவு 14(3) இன் கீழ் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பொறுப்புள்ள நபரொருவரின் வதிவிடம்.

பொலிஸ் சப் - இன்ஸ்பெக்டர் அல்லது அவருக்கும் கூடுதலான பதிவி நிலையிலுள்ள யாரேனுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் பிள்ளையொன்றை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லும் வரை பாதுகாப்பான இடமொன்றில் தங்கவைக்கப்படுவதற்காக அங்கு நேரடியாகவே அழைத்துச் செல்ல முடியும்.

இம்மாதிரியான பாதுகாப்பான இடமொன்றில் பிள்ளை தானாகவே புகலிடப் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளவும் முடியும்.

நீதிமன்றமானது பிள்ளை சம்பந்தமாக இறுதியான கட்டளையைப் பிறப்பிக்கும் வரை அப்பிள்ளையைப் பாதுகாப்பான இடமொன்றில் அல்லது தகுதிவாய்ந்த நபரொருவருடன் (இவர் உறவினராக இருக்க முடியும்) தங்கவைப்பதற்கு ஒரு தடவையில் 28 நாட்களுக்கு மேற்படாத இடைக்காலக் கட்டளையைப் பிறப்பிக்க முடியும்.
**பிரிவுகள் 88 மற்றும் 37(1)**

(2) 1998 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் பிரிவு 451 யு ஆனது, குற்றப்பகர்வு அல்லது குற்றச்சாட்டை பதிவு செய்தபின் 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளையொன்றை, சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டதாகச் சொல்லப்படுபவருக்கு பராமரிப்பு அல்லது பாதுகாப்பு தேவைப்படுகிறதெனத் தோன்றுமிடத்து வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் வரை அப்பிள்ளையை பாதுகாப்பான இடமொன்றில் வைத்திருப்பதற்கு மேல் நீதிமன்றமொன்றுக்கு அல்லது நீதிவான் நீதிமன்றமொன்றுக்கு அதிகாரமளிக்கின்றது. இம்மாதிரியான கட்டளையிடல் பராமரிப்பு அல்லது பாதுகாப்பு தேவைப்படுகின்றதெனத் தெரிந்து கொண்டமையை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டுள்ளதென்பதைத் தயவுசெய்து கவனிக்கவும்.

## பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு என்பன சம்பந்தப்பட்ட வழக்கில் நீதிமன்றத்தின் தத்துவம்

நீதிமன்றமானது பிள்ளைக்கு அல்லது இளம் பராயத்தவருக்கு பராமரிப்பு அல்லது பாதுகாப்பு தேவைப்படுகிறதென்பது பற்றி திருப்தியடைதல் வேண்டும். முன்தீர்ப்புச் சட்டத்தின்படி பெற்றோர் அல்லது பாதுகாவலர் கருத்துக்கள் கேட்கப்படுதல் வேண்டுமென்பதுடன், நன்னடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தரின் சிபாரிசை மட்டும் பின்பற்றக்கூடாது. திருப்தியடைந்த பின்பு பின்வரும் கட்டளைகளில் ஒன்றைப் பிறப்பிக்க முடியும்.

(அ) 12 வயதுக்கு மேற்பட்ட பிள்ளையொன்றை அங்கீகாரம் பெற்ற அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட பாடசாலையொன்றுக்கு அனுப்பிவைத்தல் அல்லது,

(ஆ) அப்பிள்ளையைப் பொறுப்பேற்க விருப்பத்தைத் தெரிவிக்கும் உறவினரான அல்லது உறவினரல்லாத தகுதிவாய்ந்த நபரின் பராமரிப்பின் கீழ் வைத்தல் அல்லது,

(இ) தகுதியான பராமரிப்பை வழங்கவேண்டுமென்னும் நிபந்தனையோடு பிள்ளையை அதன் பெற்றோரிடம் அல்லது பாதுகாவலரிடம் விடுவித்தல் அல்லது,

(ஈ) மூன்று வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு பிள்ளையை நன்னடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் வைத்தல்.

மேலே தரப்பட்டுள்ள பகுதிகள் (ஆ) அல்லது (இ) என்பவற்றின் கீழ் பிறப்பிக்கப்படும் கட்டளையொன்றுடன் பகுதி (ஈ) என்னும் மேற்பார்வைக்கான கட்டளையையும் சேர்த்துக்கொள்ள முடியும்.
**பிரிவு 35 (1)**

## அத்தாட்சிப்படுத்தப்பட்ட அல்லது அங்கீகாரம் பெற்ற பாடசாலைக்கு அனுப்பிவைப்பதற்கான கட்டளை சம்பந்தமான நிபந்தனைகள்

பிள்ளையினது சமயம் எதுவோ அதே சமயத்தைச் சார்ந்துள்ள அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ள அல்லது அங்கீகாரம் பெற்ற பாடசாலையைத் தெரிவு செய்வதில் நீதிமன்றம் கவனம் செலுத்துதல் வேண்டும்.
**பிரிவு 39**

அங்கீகாரம் பெற்ற அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட பாடசாலைக்கு அனுப்பிவைக்கப்படுவதற்கான ஒவ்வொரு கட்டளையும் 3 வருட காலப்பகுதிக்கு பிள்ளையைத் தங்கவைப்பதற்கு அப்பாடசாலைக்கு தத்துவமளிக்கிறது. இக்காலப் பகுதியின் முடிவில் பிள்ளையினது வயது பதினான்கிற்கும் குறைவாயிருப்பின் அப்பிள்ளை 14 வயதையடையும் வரை அதனை வைத்திருக்க முடியும்.
**பிரிவு 42 (1) 43 - 45 வரையான பிரிவுகளையும் பார்க்கவும்**

## பிள்ளையொன்றின் அல்லது இளம் பராயத்தவரின் பதிவேடு

நீதிமன்றம் பிள்ளையொன்றை அத்தாட்சிப்படுத்தப்பட்ட அல்லது அங்கீகாரம் பெற்ற, பாடசாலையொன்றுக்கு அனுப்பிவைக்கும் போது அப்பிள்ளை பற்றிய தகவல்களைக் கொண்டுள்ள பதிவேடு ஒன்றையும் அப்பாடசாலையின் முகாமையாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
**பிரிவு 43 (2)**

## தகுதிவாய்ந்த நபர் ஒருவரின் பராமரிப்புக்கான கட்டளை சம்பந்தப்பட்ட நிபந்தனைகள்

தகுதிவாய்ந்த நபர் ஒருவரின் பராமரிப்பின் கீழ் பிள்ளையொன்றை வைப்பதற்கான கட்டளையொன்று அப்பிள்ளை 16 வயதை அடையும் வரையுமே வலுவுடையதாக இருக்கும்.

பிள்ளையொன்று தகுதிவாய்ந்த நபரொருவரின் பராமரிப்பின் கீழ் வைக்கப்படும் போது அந்த நபரும், பிள்ளை எந்தச் சமயத்தைச் சேர்ந்ததோ அதே சமயத்தைச் சேர்ந்தவராக இருந்தல் வேண்டும். அவ்வாறில்லையெனில் பிள்ளையினது சமயத்துக்கு இணக்கமான முறையிலேயே அப்பிள்ளையை வளர்க்க வேண்டும்.

பிள்ளையினது தாபரிப்பைப் பொறுத்தவரை பெற்றோர் அல்லது பாதுகாவலர் கொண்டுள்ள அதே உரிமைகளையும், தத்துவத்தையும் மற்றும் பொறுப்புக்களையும் தகுதிவாய்ந்த நபர் ஒருவரும் கொண்டுள்ளார்.
**பிரிவு 46**

யாரேனும் ஆளொருவரின் விண்ணப்பத்தின் பேரில், தகுதிவாய்ந்த நபரின் பராமரிப்பின் கீழ் ஆளொருவர் வைக்கப்படுவதற்கான கட்டளையொன்றை மாற்றமுடியும் அல்லது ரத்துச் செய்யமுடியும்.

பிள்ளையொன்று தகுதிவாய்ந்த நபரொருவரின் பராமரிப்பின் கீழ் வைக்கப்படுவதற்கான கட்டளையொன்றை அந்த நபரின் அல்லது அப்பிள்ளையின் வேண்டுகோளுக்கு ஏற்ப நீதிமன்றம் மீளாய்வு செய்ய முடியும்.
**பிரிவு 57 (4)**

## பிள்ளையொன்றின் அல்லது இளம் பராயத்தவர் ஒருவரின் வயதைத் தீர்மானித்தல்

பிள்ளையின் அல்லது இளம் பராய்த்தவரின் பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியாத பட்சத்தில், வயதைத் தீர்மானித்துக் கொள்வதற்கு நீதிமன்றம் மருத்துவ அறிக்கை உள்ளடங்கலான சான்றுகளைப் பெற்றுக் கொள்ளமுடியும். இவ்வாறு தீர்மானிக்கப்படும் வயது அப்பிள்ளையுடைய அல்லது இளம் பராயத்தவருடைய உண்மையான வயதென ஊகித்துக் கொள்ளப்படுவதுடன், பின்னர் வயது வேறுபட்டதென கண்டறியப்படும் பட்சத்தில் நடவடிக்கை முறைகள் செல்லுபடியற்றனவாக மாட்டா.
**பிரிவு 80**

## குற்றஞ்சாட்டப்பட்டவரின் கணவன் அல்லது மனைவியின் சாட்சியம்

பிள்ளைக்கு அல்லது இளம் பராயத்தவருக்கு எதிரான குற்றத்தைப் புரிந்தவர் பெற்றோர்களில் ஒருவராக இருப்பின் சாட்சியமளிப்பதற்காக மற்றைய பெற்றோர் வழக்குத் தொடுப்பவரினால் அழைக்கப்பட முடியும்.
**பிரிவு 81**

## மேன்முறையீடுகளும் மீள் நோக்கும்

பின்வரும் கட்டளைகளுக்கெதிரான முறையீடு ஒன்றை பிள்ளை அல்லது இளம் பராயத்தவர் அல்லது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒருவர் மாகாண மேல் நீதிமன்றத்தில் செய்யமுடியும்.

- தகுதிவாய்ந்த நபர் கட்டளை
- தடுப்புக்காவல் கட்டளை
- அங்கீகரிக்கப்பட்ட அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட பாடசாலை கட்டளை
- நன்னடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தரின் அல்லது தகுதிவாய்ந்த நபரின் மேற்பார்வைக்கான கட்டளை ஏனைய கட்டளைகளுக்கெதிராகவும் மாகாண மேல் நீதிமன்றத்தில் மீள் நோக்குக்கு வேண்டிய விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியும்.
  **பிரிவு 84**

# சிறுவர் மற்றும் இளம் பராயத்தினர் கட்டளைச் சட்டத்துக்கு இயைபுடைய முற் தீர்ப்புச் சட்டம்

**நவரத்தினம் எதிர் கருணரத்ன 62 டேசு 82**

சிறுவர் மற்றும் இளம் பராயத்தினர் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 35(1) இன் ஏற்பாடுகளுக்கமைவாக சிறுவர் நீதிமன்றத்தில் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்கும் போது சாட்சியத்தை விசாரணை செய்து, சம்பந்தப்பட்ட இளம் பராயத்தவருக்கு பராமரிப்பு அல்லது பாதுகாப்பு தேவையென்பது பற்றி தனிப்பட்ட முறையில் திருப்தியடைய வேண்டியது நீதிவானின் கடமையாகும். **நீதிவான் நன்னடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தரின் அறிக்கையை மாத்திரம் கருத்தில் கொண்டு செயற்பட முடியாது.**

**பேரின்பராஜா எதிர் முஜஊ ஆழு கிளை, வத்தளை 1994 (2) ளுடுசு 361**

இந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருந்தது 13 வயதுடைய வீட்டு வேலையில் ஈடுபடுத்தப்பட்ட பிள்ளையாகும். நன்னடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தரின் அறிக்கையை கருத்தில் கொண்டு வேறு விசாரணகள் எதனையும் செய்யாமலும் நீதவான் இப்பிள்ளையை மக்கோனாவிலுள்ள அத்தாட்சிப்படுத்தப்பட்ட பாடசாலையில் 3 வருட காலப்பகுதிக்கு வைக்கப்பட வேண்டுமென கட்டளையிட்டார்.

**தீர்ப்பு :-**

1. கல்விக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 43 இன்படி பிள்ளையொன்று 14 வயதை அடையும் வரை பாடசாலைக்கு செல்ல வேண்டுமென்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்வது அப்பிள்ளையினது பெற்றோரின் கடமையாகும்.

2. கடந்த 7 வருடங்களாக பிள்ளை பாடசாலைக்குச் செல்லாமலிருந்த போதிலும் பெற்றோருக்கெதிராக வழக்கு தொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

3. விசாரணைகளைச் செய்து இப்பிள்ளையை அதன் பெற்றோரினால் பராமரிக்க முடியுமா என்பதை அதன் பெற்றோரிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டிய கடமை நீதிவான் மீது சுமத்தப்பட்டிருந்தது. இப்பிள்ளை எந்தவிதமான தவறையும் செய்யவில்லை. இவன் கெட்டவர்களுடனான தொடர்புகளையோ அல்லது நல்லொழுக்கத்துக்குக் கேடுவிளைவிக்கக் கூடிய சூழ்நிலையில் இருந்ததற்கோ அல்லது கட்டுப்படுத்த முடியாத நடத்தையுடையவன் என்பதற்கோ எதுவித சான்றும் இருக்கவில்லை. பெற்றோர் பிள்ளைக்கு வேண்டிய பராமரிப்பை வழங்குவதற்கு அப் பெற்றோர் தகுதியானவரா அல்லது பிள்ளைக்கு சரியான பராமரிப்பை வழங்கவில்லையா என்பதை கண்டறிய வேண்டியது நீதிவானின் கடமையாக இருந்தது. இது இயற்கை நீதி முறைக் கோட்பாடுகளை மீறுகின்ற (இதனை விசாரிப்பதற்கு ஒரு தரப்பு தேவைப்படுகிறது) செயலாக இருந்தது.

4. பிரிவு 35 (1) (உ) யின் கீழ் முறையான பராமரிப்பையும் பாதுகாவலையும் வழங்குவதற்கான ஒப்பந்தத்தைச் செய்யுமாறு பெற்றோருக்கு கட்டளையிடுவதற்கு நீதிவான் பணிக்கப்பட்டார்.

**குறிப்புகள்**

இவ்வழக்குகள் பற்றி சுருக்கமாகக் கூறின், நீதிவான் முழுமையான விசாரணையொன்றை நடத்தி, தேவைப்பட்டால் சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடமிருந்து வாய்மொழிச் சாட்சியத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பிள்ளையின் விருப்பங்கள் திட்டவட்டமாக தெரிந்து கொள்ளப்பட்டு, அவை கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பது தற்பொழுது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாவது வழக்கு, இப்பரந்துபட்ட கோட்பாடு கடைப்பிடிக்க வேண்டியமைக்கு உதாரணமாக அமைவதுடன், பெற்றோர்களையும் வழக்கு தொடர்பாக விசாரிக்க வேண்டுமென்பதையும் வலியுறுத்துகிறது.

எனவே பிள்ளை தொடர்பான தீர்மானமொன்றை எடுப்பதற்கு முன்பு முறையான செயன்முறையைப் பின்பற்றுதல் மிக முக்கியமாகும். பிரிவு 17 க்கு அமைவாக சமர்ப்பிக்கப்படும் சமூக விசாரணை அறிக்கையானது - இது முடிவானதல்ல என்றாலும் - தீர்மானத்தை மேற்கொள்ளுவதற்கான பிரதான ஆவணமாக உள்ளது.

**றெக்ஸ் எதிர் று.யு. ஜெயசேன என அழைக்கப்படும் ஜெயசிங்க 43 ஊடுறு 71**

**கிறேசியன். து.**

பத்து வயதும் ஆறுமாதங்களுமான சிறுவனொருவன் மீது கொலைக்குற்றஞ் சாட்டப்பட்டது. இக்குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு சாட்சியமொன்றும் கிடைக்கவில்லை எனினும் தண்டனைச் சட்டக்கோவையின் 333 ஆம் பிரிவின் கீழ் பிழையான மறித்து வைப்புக் குற்றத்துக்காக அவன் குற்றப்பொறுப்பை ஏற்றுக்கொண்டான். மருத்துவ மற்றும் ஏனைய சான்றுகளின் அடிப்படையில் அச்சிறுவன் விவேகமுடையவனாகவும், நல்லொழுக்கக் கட்டுப்பாட்டுக்கு ஒத்துழைப்பையும் விருப்பத்தையும் காட்டுபவனாகவும், நல்ல பிரசையாக வருவதற்கு கல்வி கற்பிக்கப்படக்கூடிய ஆற்றலைக் கொண்டிருப்பவனாகவும் காணப்பட்டான்.

இச்சூழ்நிலைகளை சீர்தூக்கிப் பார்க்கும் போது பிரகடனஞ் செய்யப்படாத சிறுவர் மற்றும் இளம் பராயத்தவர் கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் அடிப்படைக் கோட்பாடான குற்றஞ்சாட்டப்பட்டவரினதும் சமுதாயத்தினதும் மிகச் சிறந்த நலனைக் கருத்தில் எடுத்துக் கொண்டும், இக்கட்டளைச் சட்டத்தின் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதற்கு போதுமான அளவு சாதனங்கள் இல்லாமை காரணமாகவும் குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவையின் 325(2) மற்றும் 325(2) (2ஊ) ஆகிய பிரிவுகளின் கீழ் வரும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுவிக்கப்பட வேண்டுமென்னும் அபிப்பிராயத்தை நீதிமன்றம் கொண்டிருந்தது.

**ஜோன் மத்தியூ 1986 (1)** ஏடுசு 243

இளம் பராயத்தவர் ஒருவர் எந்தவிதமான தவறுக்கோ அல்லது தண்டப்பணத்தைச் செலுத்துவதற்குரிய தவணையைத் தவறவிடுவதற்காகவோ - விளக்கமறியல் இல்லமொன்றில் அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட பாடசாலையில் தடுத்து வைக்க முடியாதளவுக்கு கீழ்ப்படியாத ஒருவரென அல்லது இவ்வாறு தடுத்துவைப்பதற்கு தகுதியற்ற துர்நடத்தையுள்ள ஒருரென நீதிமன்றம் அத்தாட்சிப்படுத்தினாலே தவிர மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை விதிக்க முடியாது.

**அத்துறுப்பனே 51** டுேசு 21

**கிறேசுஷியன் து.**

குற்றவியல் நடவடிக்கை முறைக்கோவையின் பிரிவு 289 (2) இல் விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்கு கூடுதலான காலத்துக்கு குற்றஞ்சாட்டப்பட்டவர் விளக்கமறியலில் வைக்கப்படும் போது, குறிப்பிட்ட இக்காலப்பகுதியின் முடிவில் விசாரணை அல்லது வழக்கு பின்போடப்பட வேண்டியிருப்பின் பொருத்தமான கட்டளை என்ன என்பது பற்றி மீண்டும் நீதிவான் சிந்திப்பதற்கு இடமளிப்பதற்காக அவர் நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்படல் வேண்டும். பிணையில் விடுவிப்பதானது நீதிவான் தனது நீதிமுறைத் தீர்மானத்தைப் பயன்படுத்துவதையும், ஒவ்வொரு வழக்கிலும் அதியுயர்ந்தளவு ஆவல் நிறைந்த கவனத்தையும் வேண்டிநிற்கிறது.

ஐக்கியத்துக்கும் வளர்ச்சிக்குமென அர்ப்பணிக்கப்பட்டுள்ள கண்ணோட்டமொன்றைப் பேணுவதற்காக நீங்கள் போரிடுகையில் மகாத்மா காந்தியடிகளின் வார்த்தைகளை கவனத்தில் கொள்ளுங்கள்:

பிராணியொன்று எவ்வளவுக்கு தனக்குத்தானே உதவமுடியாமலிருக்கின்றதோ, அவ்வளவுக்கு மனிதனால் இழைக்கப்படும் கொடுமையிலிருந்தும் மனிதனால் பாதுகாக்கப்படுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. ஆயினும், இம்மாதிரியான சேவைக்கு தானாகவே தகைமையைப் பெற்றிராத ஒருவன் அப்பிராணிக்கு எந்தவொரு பாதுகாப்பையும் வழங்க முடியாதவனாகின்றான் என்பதை நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

- மகாத்மா காந்தி

Save the Children
in Sri Lanka

unicef